உ
சிவமயம்

gistered as a News paper in Ceylon P. M. G. No. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்வ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஞு ஆடிமீ கஉ (1946 ஜுலை 16 செவ்வாய்க்கிழமை) [இல உகூ


## அடுத்த யுத்தம்

### 10 வருஷ காலத்தில் நிகழுமா? அணுக்குண்டின் பயங்கரத் தன்மை

### உலகமே அழிந்துவிடும் என்கிறார் உலக சிரேட்டர் மகாத்மாகாந்தி

இன்னும் பத்துவருஷத்தில் இன்னோர் மகாயுத்தம் வந்துவிடுமோ என்று மகாத்மாகாந்தி மிகவும் மன வேதனைப்படுகிறார். அப்படியான ஓர் யுத்தம் நிகழுமானால் இந்த உலகமே அழிந்து ஒழிந்து விடும். இவ்வாறு மகாத்மா காந்தியடிகள் லண்டன் "டெயிலி ஹெரல்ட்" பத்திரிகையின் நிருபர் ஒருவர்க்குக் கூறினார். இது விஷயமாக மேற்படி பத் பத்திரிகை நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்: —

உலகத்தின் இன்றைய நிலைமையைக்கண்டு மகாத்மாகாந்தி மனச் சோர்வடைந்திருக்கிறார். இன்னும் பத்து வருஷங்களுக் குள்ளாகவே மற்றொரு மகாயுத்தம் நடக்குமென்றே அவர் நினைக்கிறார்

அணுக்குண்டின் பயங்கரமான மான தன்மையினால் உலகில் அஹிம்சை ஆக்கம்பெறும் என்று நான் யோசனை கூறினேன், இந்த யோசனையைக் காந்திஜி ஏற்றுக் கொள்ளவில்லை, ஹிம்சையில் ஆர்வங்கொண்ட மனிதன் மேன்மேலும் நாசத்தையும் மரணத்தையும் உண்டு பண்ணும் வேலையில்தான் அதிகமாகக் கவனஞ் செலுத்துவான் என்று காந்திஜி கூறினார்.

இந்தியாவிலுள்ள ஏழை மக்கள் சுதந்திரம் பெறும்வரை இந்தியா உண்மையான சுதந்திரம் பெற முடியாது. எனினும் அமெரிக்காவில் நீக்ரோ மக்களும், தென்னாபிரிக்காவிலும், கிழக் காபிக்காவிலும், இந்தியரும் மற்றுமுள்ள ஆசியாக் காரர்களும் சட்டபூர்வமாக அடைந்து வரும் கஷ்டங்களைப்போல் இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் கஷ்டம் அனுபவித்து வரவில்லை என்று மகாத்மா என்னிடம் விளக்கமாக எடுத்துரைத்தார்."

## பாராட்டுகிறார்கள்!

இலங்கை சுகாதார மந்திரியும் இலங்கை தேசியக் காங்கிரஸ் தலைவருமான மிஸ்ரர் ஜியார்ஜ் ஈ. டி. சில்வா, இலங்கை இந்தியப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக இந்திய தேசிய காங்கிரஸ் ஓர் உபசபையை நியமித்திருப்பதைப் பாராட்டியும், இந்திய காங்கிரசின் செய்கையை வரவேற்றும் பத்திரிகைகளுக்குஓர் செய்திவிடுத்திருக்கிறார்.

"இலங்கை இந்தியர்களுக்கு, இந்திய தேசிய காங்கிரஸ்தெரிவித்துள்ள ஆலோசனையைக் கேட்க நான் சந்தோஷமடைகிறேன்" என்று மிஸ்ரர் சேனநாயக்காவும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.

## இலங்கையின் மாவு நிலைமை அபாயகரமானதாம்

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உணவுப் பிரச்னை சம்பந்தமான ஓர் கூட்டம் சென்றவாரம் சிங்கப்பூரிற் கூடியது. அக்கூட்டம் முடிந்ததும் இலங்கைப் பிரதிநிதியான ஸ்ரீ இராஜசிங்கம் இலங்கையின் உணவுநிலை சம்பந்தமாகப் பின்வருமாறு கூறினார்: "இலங்கையின் மாவு நிலைமை மிகவும் கேவலமாயிருக்கிறது உதவி கிடைக்காவிட்டால், இன்னுஞ் சொற்ப காலத்திற்குள், கையிருப்பாக ஒரு துளி மாவுதானும் இலங்கையில் இருக்காது. இதுமாத்திர மன்றி, எகிப்து, பிரேசில் முதலம் நாடுகளிலிருந்து அரிசிக்கப்பல்களும் ஒழுங்காய் வருவதில்லை. கப்பல்கள் இனியும் ஒழுங்காகக் காலக்கிரமப்படி வராவிட்டால், இப்போதுள்ளஉணவு விநியோக அளவைக் குறைக்கவேண்டியேற்படும்.

### உத்தரவு வேண்டும்

இலங்கையில் அரசாங்கத்தாரின் முறையான உத்தரவு இல்லாமல் ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு மாவு கொண்டு செல்லக்கூடாதென்று அரசினர் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறனர்.

### ஸ்ரீ ஜூத் ஆனே

இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாயுள்ள ஸ்ரீ ஜூத் எம். எஸ். ஆனே சென்ற வியாழனன்று இந்தியாவுக்குப் பிரயாணமானார். இலங்கை வாழ் இந்தியர் நிலைமையை இந்திய அரசாங்கத்துக்கு அவர் எடுத்துரைத்துவிட்டு, இம்மாத முடிவில் இலங்கைக்குத் திரும்புவார்.

## ஆசிரியர்வேதனம் அதிகரிக்கப்படுமா?

சென்ற 10-ம் திகதி அகில இலங்கையிலும் ஆசிரியர் தினம் நடத்தப்பட்டது. காலியில் நிகழ்ந்த ஆசிரியர்தினக் கூட்டத்திற் பேசிய அரசாங்கசபைப் பிரதிநிதியான மிஸ்ரர் H W. அமரசூரியா, ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் வேதனம் மிகவும் அற்பம் என்றும், இந்த வேதன முறையை அரசாங்கசபை திருத்தி அமைத்துத் திருப்தியான ஓர் வேதன விகிதத்தை விதிப்பதற்கான உற்பாதங்கள் காணப்படுகின்றன என்று கூறினார்.

### புதிய "அற்ரேணி ஜெனரல்"

இலங்கை அற்ரேணி ஜெனரலாக ஸ்ரீ ஸி. நாகலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டுவிட்டார்.

## கல்வி ஏது?

### வெறும் கேலிக்கூத்து!

சென்றவாரம் நீர்கொழும்பில் நிகழ்ந்த ஆசிரியர் தினத்தின்போது நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில், அரசாங்கம் ஆசிரியராயுள்ளாரைப் புறக்கணிப்பதைப் பலர் கண்டித்தனர். இந்த நாட்டின் வருங்கால மக்களை நல்வழிப்படுத்த வேண்டியவர் ஆசிரியர். அவர்களைக் கௌரவத்துடனும் மரியாதையுடனும் நடத்தவேண்டிய அரசாங்கம், கேவலப்படுத்துவது முறையல்லவென்று எல்லாரும் பேசினர். கல்வி விஷயமாக அரசினரைக் கைக்கொள்ளும் முறையைக் கண்டித்துப் பேசிய நியாயவாதி மிஸ்ரர் மக்கென்ஸி பெரீரா பின்வருமாறு கூறினர்:

"இந்தச் சம்பளத் திட்டத்தைக் கண்டு நாம் அதிசயப்படத் தேவையில்லை. இந்த அரசாங்கம் செய்யும் வேலைகள் யாவும் இப்படியே தான். இவர்கள் அளிக்கும் கல்வி முறையைப் பாருங்கள். இந்த இலங்கையில் இப்போது உண்மையான, பயன்தரும் கல்வி பயிற்றப்படுகின்றதா? இந்தப் பாடத்தில் ஒன்று, அந்தப்பாடத்தில் ஒன்றாக, வெள்ளாடு கடித்த மாதிரி மாணவர்கள் படிக்கத் தூண்டப்படுகிறார்கள் எந்த விஷயத்திலும் அவர்களுக்குப் பூரண அறிவு ஊட்டப்படுவதில்லை,

## பைத்தியப் பதவி!

### ஆசிரியர் வேலைக்கு பைத்தியரின் மநு

சென்ற 10-7-46ல் கொழும்பில் "ஆசிரியர் தினம்" சம்பந்தமாக நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில் வண. ஹைட் என்னும் கத்தோலிக்க குருவானவர், அரசாங்கத்தினர் ஆசிரியர்க்கு வழங்கி வரும் கேவலமான சம்பள விகிதத்தைக் கண்டித்துக்கூறினார். "அரசாங்கம் உதவும் அற்ப வேதனத்துக்காக, உபாத்திமைத் தொழிலில் ஈடுபட எவரும் முன்வருகின்றாரில்லை. எனது பாடசாலை ஒன்றில் ஆசிரியர் பதவி காலியாக இருந்தது. அதற்கு ஒருவர் வேண்டும் எனப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தினேன். அங்கோடைப் பைத்தியகாரர் ஆஸ்பத்திரியில் பைத்தியம் பிடித்துக் கிடக்கும் ஒருவர்தான் அந்தப் பதவிக்கு மநுச் செய்தார். வேறெவரும் மநுச் செய்யவில்லை. ஆசிரியத் தொழிலுக்குள்ள கௌரவம் எவ்வளவில் இருக்கிறது என்பதை இதில் இருந்து அறியலாகும்"

"இப்படியான கல்வி முறை இனியும் எங்கள் நாட்டில் இருக்குமேல், எம் பிற்கால சந்ததியாரின் நிலைமை என்னாகிவிடுமோ அறியேன். இதனை மாற்றியமைக்கவேண்டும்".

## நோக்கம் என்ன?

### இலங்கையில் இந்தியர்க்கு அநீதி அடியோடு ஒழிப்பது நோக்கமா?

### சிங்களத் தலைவர்க்கு நேருவின் வேண்டுகோள்

இலங்கையில் வாழும் இந்திய மக்களுடைய பிரச்சினை விஷயமாகப் பண்டிதர் ஜவஹர்லால் நேரு சென்றவாரம் நிகழ்ந்த காங்கிரஸ் பாராளுமன்றத்திற் கூறிய பின்வரும் பொன்மொழிகளை இலங்கையில் உள்ள சிங்களத்தலைவர்கள் ஊன்றி அவதானிப்பாராக:-

"இந்தியபொதுமக்களுக்கும் இலங்கைப் பொதுமக்களுக்கு மிடையே விரோத உணர்ச்சிகளைக்கிளப்பிவிடக்கூடிய எதையும் சொல்லவோ, செய்யவோ காங்கிரஸ் தயாராயில்லை யென்பதை அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தியாவில் இருந்துவரும் நேசபூர்வமான மிருதுத்தன்மை வாய்ந்த உறுதியான வற்புறுத்தல் இலங்கை அரசினர் இலங்கையில் குடியேறிய இந்தியமக்கள் பிரச்சினை சம்பந்தமாகக் கையாண்டுவரும் கொள்கையை மாற்றிக்கொள்ளும்படி செய்துவிடும்.

"இலங்கைவாழ் இந்தியர் விஷயத்தில் வாக்குரிமை, பிரஜா உரிமை முதலிட அநேக பிரச்னைகளில நெடு நாட்களாக சிக்கல் இருந்து வருகிறது. இப்போது உருளிவெளித் தோட்டத்தில் இருந்து சில நூற்றுக் கணக்கான இந்தியத் தொழிலாளர்கள் வெளியேற்றப் பட்டதால் அங்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது நம்முடைய நிலைமை முற்றிலும் வேறானது. அங்குள்ள இந்தியர்களுக்கும் சிஙகளவர்களுக்குமிடையே உறவுகள் முறிந்து போகக்கூடிய எதையும் செய்ய நாம் விரும்பவில்லை ஏனெனில் சிங்களவர்களையும் இந்தியாவின் மற்றொரு பாகத்திய மக்களாகவே நாம் கருதுகிறோம். அவர்கள் கலை, ஜாதி, மொழி, பூகோளம் ஆகிய எல்லாதுறைகளிலும் நம்மைச் சேர்ந்தவர்களே.

"துரதிர்ஷ்டவசமாக சமீபத்தில் இலங்கை அரசினர் கையாண்டுவரும் கொள்கைகள் இலங்கையிலிருந்து இந்தியர்களை அடியோடு ஒழிப்பதற்கோ அல்லது அவர்களின் நிலைமையை க்ஷீணப்படுத்துவதற்கோ கையாளப் படுபவைகளாய் அமைந்துள்ளன.

"இலங்கையைத் தங்கள் தாய்நாடாகக் கொண்ட இந்தியர்கள் மட்டுமே இலங்கைப் பிரஜா உரிமைகளைப் பூரணமாக அனுபவிக்கலாமென்று இலங்கை அரசினர் கூறுவதை நான் அறிவேன. பர்மாவிலும் இதர வெளிநாடுகளிலும் உள்ள இந்தியர்களைப் போலவே இலங்கை இந்தியர்களும் தாங்கள் வாழும் நாடு தங்கள் தாய்நாடா அல்லது இந்தியாவே தங்கள் தாய்நாடா என்பதை முடிவுசெய்ய வேண்டியிருக்கிறதெனக் கருதுகிறேன்."

### 34 கோடி 20 லட்சம் வருமானம்

தற்போதுள்ள வரி வரவு நிலைமையின்படி 1947 47 ம் வருடத்தில் இலங்கையின் உத்தேச வருமானம் 36 கோடி 20 லட்சம் ரூபா எனத் தெரிகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹு
ஆடிமீ கஉ செவ்வாய்க்கிழமை

## மதுபானம் அதிகப்படுகின்றது

இந்த நாட்டிலே சென்ற மகாயுத்தத்தினால் விளைந்த பெருங்கெடுதிகளுளொன்று மதுபானமாகும். மதுபானமானது இந்த இலங்கையிலுள்ள பிரதான சமயவாதிகளாகிய சைவர், பௌத்தர், கிறீஸ்தவர், இஸ்லாமியரென்னும் நான்கு பகுப்பினர்க்குமுரிய சமய நூல்களால் விலக்கப்பட்டதெனினும், இஸ்லாமியரொழிய ஏனைய மூன்று சமய மக்களாலும் பெரும்பான்மையும் உபயோகிக்கப்படுகின்றதெனலாம். இந்த யாழ்ப்பாணப் பெரும்பகுதியிலே இக்காலத்தில் மதுபானஞ் செய்வோர் தொகை அதிகமாகவும் செய்யாதார் தொகை குறைவாகவுங் காணப்படுகின்றது. மதுபானம் அதனுள்ளுங் கள்ளுக் குடித்தலாகிய தீயசெயல் அதிகப்பட்டமை இந்த யுத்தகாலத்திலும் இதற்குப் பின்னுள்ள இக்காலத்திலுமேயாகும். யுத்தங் காரணமாக உணவுப்பொருட் கட்டுப்பாடும் தட்டுப்பாடு முண்டாக, ஆங்கில டக்ரர்மாரும் சுகாதாரப் பகுதியாருட் சில அதிகாரிகளும் கள்ளுச் சிறந்த உணவென்று மதுபானத்திற்கு "நற்சாட்சிப் பத்திரம்" கொடுத்துவிட, கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் தீவுப்பகுதியிலும் எந்த நேரமும் நின்று தாண்டவமாடலாயிற்று; இந்தக் கட்குடி இந்நாட்டிலே அதிகப்படுதற்கு இன்றியமையாத் துணையாகவுள்ளது மரவரி முறையாகும். இந்த மரவரி முறைப்படி, கள் சேர்க்கப்படும் ஒவ்வொரு பனையின் அடியும் தென்னையி னடியும் கட்கடையாக, கள்விற்போரும் அம்மரங்களின் அடியி லிருந்துகொண்டு கட்சாடை காட்ட, குடியரும் அக் கட்கடைகளிற் கண்ணோட்டம் வைக்கிறார்கள் யாழ்ப்பாணத்திலே சிற்சில இடங்களிலே பெண்களும் பள்ளிக்கூடப் பிள்ளைகள்தாமும் மதுபானஞ் செய்கின்றார்களென்ற முறையீடு வெளிவரலாயிற்று.

இந்த யாழ்ப்பாண நாட்டிலே அந்த நாட்களில் மதுபானத்தைத் தலையெடுக்க வொட்டாது தடுத்தற்காகிய முயற்சிகள் பல செய்யப்பட்டு வந்தன; மதுவிலக்குச் சங்கங்கள் பல அக்காலத்தில் ஏற்பட்டு மதுவிலக்குப் பிரசாரணவேலை செய்துகொண்டிருந்தன; பள்ளிக்கூட உபாத்தியாயர்களாயுள்ளவர்களும் உயர்தர மாணவர்களும் இன்னும் பல அபிமானிகளும் அக்காலத்தில் மதுவொழித்தற் பிரசாரணத்திலே ஈடுபட்டுழைத்ததை நாம் நேரில் அறிவோம். அக்காலத்திருந்த இந்துவாலிப சங்கம் போன்ற சங்கங்களும் சபைகளும் மதுவிலக்குங் கருமத்தில் ஈடுபட்டுப் பிரசங்கங்களை ஊர்தோறுஞ் சென்று செய்வித்தும் துண்டுப் பிரசுரங்களை ஊர்தோறும் பரப்பியும் உழைத்து வந்தமையையும் நாம் அறிவோம்.

ஆனல் இக்காலத்தி லெனிலோ மதுவிலக்குச் சங்கங்கள் கிடையா; பள்ளிக்கூடங்களிலே உபாத்தியாயர்களும் உயர்தர மாணவர்களும் மதுநீக்கத்தின் பொருட்டு எவ்வாற்றாலேனும் உழைத்தல் அத்தி பூத்தவாறாயிற்று. இவர்கள் மதுபானத்தை இன்னும் வெளிப்படையாக அபிமானிக்கத் தலைப்படாமை இங்குள்ள மக்கள் ஈட்டிய புண்ணிய விசேடத்தின் சேடமென்று சொல்லலாம். மதுபான விஷயத்தில் மாத்திரமல்ல இப்படியான எந்த விஷயத்திலும் இக்காலத்து உபாத்தியாயர்கள் பராமுகங் காட்டத் தலைப்பட்டுக் கொண்டனர்; இந்துவாலிப சங்கம் சைவஇளைஞர் சங்கமென்றிருப்பன வெல்லாம் ஆண்டுதோறும் குறித்த சில நாட்களிற் கூட்டங்கள் கூட்டி மக்களொழுக்கத்திற்காகிய வாய்ப் பிரசங்கங்களைச் செய்துவிட்டு வாளா விருத்தலாயின; சனத்தலைவரென்றிருப்போர் அரசியல் விவகாரத்துள்ளே தலையைப் புகுத்திவிட்டு, மிடாவினுள் தலைபுகுத்திய ஆட்டுக்கடாவைப் போல் மீட்டெடுக்க முடியாமல் இடர்ப்படுகின்றனர் மேலும் பதவிவேட்டையாடவிருக்கும் பேரபிமானிகட்கு நாட்டிலுள்ள தீமைகளை யொழிக்கும் விஷயத்தில் உள்ளஞ் செல்லாதென்பர்; இந்நாட்டிலே இப்பொழுது தாண்டவமாடும் மதுபானம், இதுபோதாதென்று ஆநந்த தாண்டவமாடுதற்காகிய காலம் வரப்போகின்றது; எப்போது? இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தவர்களை இங்குள்ள மக்கள் தேர்தல் செய்யுஞ் சமயத்திலேதான். இப்படியானல், மதுபானமும் அதனல் நேரக்கூடிய தீமைகளும் குன்றுமென நாம் எதிர்பார்த்திருத்தல் அசம்பாவிதமல்லவா?

---

### அறிவித்தல்

சைவப்பிரகாசயந்திரசாலை, ஆங்கில இந்துசாதனம், தமிழ் இந்துசாதனம் ஆகிய ஸ்தாபனங்களின் மனேஜராக விருந்து கடமையாற்றிய திரு. சி. பொன்னுச்சாமி அவர்கள் தேகவியோகத்தின் பொருட்டு அவருடைய ஞாபகமாக சைவப்பிரகாச யந்திரசாலைக் கந்தோர் நாளை 17-7-46 அன்று மூடப்பட்டிருக்கும்.

16-7-46. பிரதி மனேஜர்

---

### அரசாங்கக் கடிதங்கள்

எந்தப் பாஷையிற் கடிதங்கள் வருகின்றனவோ அதேபாஷையில் மறுமொழியளிக்க அரசாங்கப் பகுதிகள் கூடியவரை இப்போது முயற்சி செய்கின்றன. இவ்விஷயத்தில், கூட்டுறவுப்பகுதி, தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பாளர்களை நியமித்து முன்மாதிரி காட்டியிருக்கிறது. இந்தப் புதிய முறையினல், கடிதங்கள் முன்னரிலும் பார்க்க இப்போது அதிசீக்கிரமாக [illegible]ன்றன என்று [illegible].

# இந்திய அரசியல்

### லீக்கின் சீற்றம்

காங்கிரஸ் இல்லாமல், இடைக்கால அரசாங்கத்தைத் தாமே அமைத்து, ஹிந்துக்களின் சொந்தநாடான பாரதவர்ஷத்தில் சர்வாதிகாரம் செலுத்தித் தாண்டவம் புரியலாம் என்று ஜின்னசாய்பு கண்டகனவெல்லாம், இராஜப்பிரதிநிதியின் ஒரே வார்த்தையால் அவலமாய்விட்டன. அரசியல் நிர்மாண சபையைக் கைப்பற்றி, அதில் உள்ள பிழைகளை அகற்றி, அதனை உண்மையான ஜனநாயகச் சபையாக்குவோம்: அந்த முயற்சியில் தோல்வியடைந்தால். அச்சபையை விட்டு வெளியேறிச் சுதந்திரப் போரை மீண்டும் மும்முரமாக நடத்தி வருவோம் என்று காங்கிரஸ் மகா சபையில் வீரன் நேரு அன்று செய்துள்ள முழக்கம் முஸ்லீம் லீக்கில் உள்ள நவாப்புகளையும் நவாப்ஸதாக்களையும் தூக்கிவாரியிருக்கிறது அரசியல் நிர்மாணசபையில் காங்கிரஸ் தனதுசார்பாக அநேக முஸ்லீம்களையும் அனுப்பத் தீர்மானித்ததும் முஸ்லீம் லீக்கிற்கு இன்னேர் தலையிடியைக் கொடுத்துள்ளது. எனவே அதன் காரியதரிசியான நவாப்ஸதா லியாக்கத் அலிகான், அரசியல் நிர்மாணசபைக்குப் போவது என முஸ்லீம் லீக் ஏற்கெனவே தீர்மானித்ததை இனிப் புநராலோசனை செய்ய வேண்டும் என்றும், அரசியல் நிர்மாணசபையில் சேர்ந்து ஒத்துழைப்பதினல் முஸ்லீம் லீக் தன்னைத் தற்கொலை செய்து கொள்ளுவதாக முடியும் என்றும் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார் முஸ்லீம லீக் இல்லாமல், காங்கிரஸ் தனியே, மற்றும் சமூகத்தினருடன் அச்சபைக்குட் புகுந்து கருமம் ஆற்றினல், முஸ்லிம் மக்கள் வாளாவிருக்கார்: போர் தொடுத்துத் தம் உரிமைகளை நாட்டுவர் என்னும் கருத்துப்பட நவாப் ஸதா கூறினர். இது எத்தனையாவது வெருட்டோ தெரியவில்லை.

### எல்லைப்புறத் தெரிவு முடிவு

அரசியல் நிர்மாணசபைக்கு எல்லைப்புறத்திலிருந்து, மௌலான அபுல் கலாம அசாத், கான் அப்துல் கபார் கான் என்பவர்கள் காங்கிரஸ் சார்பாகவும், சர்தார் பகதூர் கான் முஸ்லீம் லீக் சார்பாகவும், பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

### சிந்துவில் குழப்பம்

சிந்து தேசாதிபதியின் கருணையினல் ஸ்தாபிக்கப்பட்ட அந்நாட்டு மந்திரசபை இன்று அல்லோல கல்லோலப்படுகின்றது. சிந்துச் சட்டசபையில் காங்கிரசும், சையத் கட்சியும் பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்றியும், அவற்றைக்கொண்டு மந்திரசபையை அமைக்காது, முஸ்லீம் லீக்கைக் கொண்டு மந்திரசபையை அமைத்தார், தேசாதிபதியான மட்டி என்பவர். இப்போது அந்த மந்திரசபையின் செல்வாக்கு வரவர அருகிக்கொண்டே வருகிறது. அதனை ஆதரித்து வந்த முஸ்லீம் லீகினரில் இரண்டுபேர் இப்போது எதிர்க்கட்சியிற் சேர்ந்து விட்டனர். எதிர்க்கட்சிக்கு இப்போது அதிக பலம் ஏற்பட்டிருக்கிறது சட்ட சபையைக் கூட்டவேண்டும் என்றும் அப்படிக் கூட்டப்படும் சட்டசபைக் கூட்டத்தில் மந்திரசபை மீது ஓர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்தாளப் போவதாகவும் எதிர்க் கட்சியினர் தேசாதிபதியைக் கேட்டிருக்கின்றனர். முஸ்லீம்லீக்கின் போஷகரான தேசாதிபதி இதற்கு இணங்குவதாகத் தெரியவில்லை. எனவே, இவ்விஷயத்தை எதிர்க் கட்சியினர் இந்திய மந்திரிக்கும் இராஜப்பிரதிநிதிக்கும் அறிவித்து ஏற்ற நடவடிக்கைகளைக் கையாள நிச்சயித்திருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள 11 மாகாணங்களில், வங்காளம், சிந்து என்னும் இரண்டே இரண்டு மாகாணங்களில்தான் முஸ்லீம்லீக் அதிகாரம்செலுத்துகிறது, சிந்தில் மந்திரசபை கவிழுமானல், முஸ்லிம் லீக்கின் செல்வாக்கு ஈற்றில் அழிந்து ஒழிந்துவிடும் என்பதற்கு ஐயமில்லை.

---

### தேகவியோகம்

#### திரு. மு. கணேசன்

யாழ்ப்பாணத்திற் பிரபல ஆயுர்வேத வைத்தியராக விளங்கிய திரு. க. முத்துக்குமாரு அவர்களின் கனிஷ்ட புதல்வரும், திரு. கதிரைவேற்பிள்ளை வைத்தியர் அவர்களின் தம்பியாருமாகிய திரு. கணேசன் என்னும் வாலிபர் நேற்று (15-7-46) அதிகாலையில் தம்மைச் சில தினங்களாகப் பிடித்த சுரநோய் காரணமாகத் தமது தாயார், சகோதர சகோதரிகள், உற்றார் அயலரர் புலம்ப வண் - கிழக்கில் உள்ள வைத்தியர் இல்லத்திலேயே எவருங் காத்திரரவண்ணம் இவ்வுலக வாழ்வை நீருவினர். இவருக்கு இறக்கும்போது வயது 21 வரையிலிருக்கும். இவர் சாந்த குணமும், இன்சொல்லும், கல்வியொழுக்கமும் உடையவர். இவருடைய அகால மரணம் பெரிதும் அநுதாபப்படத்தக்கது, இவர் ஆன்மா சாந்தியடைக.

---

### பாராளுமன்றத் தெரிவு அடுத்த ஏப்ரல் மாதத்தில்

இப்போதுள்ள அரசாங்கசபை அடுத்த ஆண்டு பிப்ரவரி வரையிற் கலைக்கப்படுமென்றும், புதிய பாராளுமன்றத்துக்கான தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெறுமெனவும் கொழும்பு "ரைம்ஸ்" பத்திரிகைச்செய்தி ஒன்று கூறுகிறது.

## படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்

பேராசிரியர் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
அவர்கள் B. A. எழுதியது

பயிற்றப்படும் தமிழ் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பரீட்சைக்கும்,
ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சைக்கும் பாடமாக
விதிக்கப்பட்டுள்ளது

இதன் இரண்டாம்பதிப்பு மேற்படி நூல் ஆசிரியர் அவர்கள் செய்த
பல திருத்தங்களோடு

**யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார்**
வெளியீடாக அச்சிடப்படுகின்றது.

கூடியசீக்கிரம் வெளிவரும்

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயராஜ்ய ஸ்தாபனம்

## அந்தமானைக் கைப்பற்ற விதம், சுயராஜயப் போரில் இடையூறுகள்

### டோஜோவின் வாக்குறுதிப் பூர்த்தி

(முற்றொடர்)

**கைமேற் பலன்கள்**

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் எதற்காக இந்தச் சுதந்திர இயக்கத்தைத் தாபித்தார்? எதற்காகச் சுதந்திர அரசாங்கத்தை நிறுவினர்? என்னும் கேள்விகளுக்கு அவரே பதில் சொல்லி யிருக்கிறார். "இப்போதுள் தாபிக்கப்பட்டிருக்கும் இந்தச் சுதந்திர அரசாங்கத்தின் கடமைகள் இரண்டே இரண்டு. ஒன்று அந்நியராகிய பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியாவைச் சிறைமீட்பது: மற்றது அப்படிச் சிறைமீட்கப்பட்ட இந்தியாவில் ஸ்திரமான அரசாங்கம் ஏற்படும்வரையில், அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவது. இந்த இரண்டு கடமைகளையும் பூர்த்தியாக்குமுன் உங்களுக்கு ஓய்வோ சிரமபரிகாரத்துக்கான லீவோ கிடைக்கமாட்டாது என்பதை ஏற்கெனவே எச்சரித்துக் கொள்கிறேன். டெல்லிக்கு நாங்கள் செல்லவேண்டும். டெல்கிக் கோட்டையைத கைப்பற்ற வேண்டும். அங்கே எமது வெற்றிப் பவனியை நாம் நடத்தவேண்டும். அங்கே நாங்கள் எங்கள் ஜயத்துக்கான அணிவகுப்பு நடக்குமுன்னர் எமக்கு ஓய்வும் லீவும் கிடைக்காது. பசி, பட்டினி, நோய், துன்பம், மரணம்: இவைதான் உங்களுக்கு அநேகமாகக் கைமேற் கிடைப்பன. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது, எதுவந்தாலும் அஞ்சாது என்னை நீங்கள் பின்பற்றி வருவீர்களேயானல், நாங்கள் எல்லாரும் சுயராச்சிய மாளிகையை அடைவது நிச்சயம்" என்று போஸ் கூறியிருப்பதிலிருந்து இவருடைய தேசாபிமான உணர்ச்சி எத்தகையது என்பது புலப்படும்.

**இரகசியத் தூது**

மேலும் மேலும் இரகசியத் தூதுவர் இந்தியாவுக்கு வேவு பார்க்க அனுப்பப்பட்டனர். இந்தியாவிலேயுள்ள புரட்சி இயக்கங்களும், தங்கள் பிரதிநிதிகளை போஸிடம் இரகசியமாக அனுப்பி, இந்தியாவில் நிகழும் சம்பவங்களை எடுத்துரைத்தன. இந்த உளவுகாரர் செய்த மகாவீரத்தனமான செயல்கள் வெளிவரும் காலத்தில், எங்கள் பாரதநாட்டிலும், மற்ற நாடுகளைப்பார்க்கிலும் சிறந்த ஒற்றரும் இரகசியத் தூதுவர்களும் இருந்து, மகத்தான சேவைகள் ஆற்றியிருக்கிறார்கள் என்பது புலப்படும். இந்தியாவிற்கு வந்த ஒற்றர்களிற் பலரை, பிரிட்டிஷார் பிடித்துச் சிறையிட்டனர். சிலர் கொல்லப்பட்டனர். இன்னுஞ் சிலர் இன்றும் இந்தியச் சிறைக்கூடங்களில் வாடி வதங்குகின்றனர். இவர்களை இந்திய அரசாங்கம் மிகவும் மிருகத்தனமாக நடத்தி வருகிறது என்று சொல்லப்படுகிறது இவர்கள் பொருட்டு முதன்முதலாகத் தம் அநுதாபத்தைத் தெரிவித்து அவர்களைக் கண்ணியமாக நடத்த வேண்டுமென்று நம் ஜவஹர்லால் தம்மாலான முயற்சிகள் யாவற்றையும் செய்துகொண்டு வருகிறார். பாரதநாடு, இவ்விஷயத்தில் நேருவுக்கு என்றுங் கடமைப்பாடுடையதாகும்.

**இங்கிலாந்து மீது யுத்தந் தொடுத்தல்**

இந்தியா ஓர்புராதனநாடு; யோக்கியம், கௌரவம் என்பவற்றையே ஆதாரமாகக் கொண்டது எங்கள் பாரதநாட்டு நாகரிகம். வீரத்தில், உதாரத்தில் ஈடு இணையற்றது எங்கள் பாரதநாடு. வஞ்சகத்தையும் சூதையும் அறியாதது எங்கள் பாரததேசம்: சத்துருவானாலும் அவனைக் கௌரவமாக நேர்முகமாக எதிர்க்கும் கௌரவ முறையைப் பூண்டது எங்கள் ஆரியநாடு. இப்போது நடந்து முடிந்த யுத்தத்தின் முற்பகுதியில் இங்கிலாந்து மிகவும் கேவலமான நிலையில் இருந்தது. அந்தக் காலத்தில் சுதந்திரக் கிளர்ச்சிசெய்து இங்கிலாந்துக்கு மோசமான நிலைமையை வருவிக்கக்கூடாது என்று எங்கள் தேசியக் காங்கிரஸ் தீர்மானித்து யுத்தந் தொடங்கி மூன்று வருஷங்களின் பின்னரே சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தது. இந்திய தேசியக் காங்கிரஸ் செய்தது போலவே, எமது சேனபதி போஸும் செய்தான். இங்கிலாந்துக்குப் போதிய எச்சரிக்கை கொடுத்தான். புறநாட்டில் இருந்து போர் புரியாமல், இந்தியாவிலேயே வைத்து இங்கிலாந்துடன் சமர் புரியலாம்; அதற்கு இங்கிலாந்து தயாராகவிருக்கிறது என்பதை அறிந்தபின்னரே போஸ், பிரிட்டன்மீது முறைப்படி போர்தொடுத்தார். இது நிகழ்ந்தது 1943-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ந் திகதியாகும். இந்தியாவிற்கு நேர்ந்துள்ள பெரும் சாபக்கேடு வகுப்புப் பிரச்னையாகும். எனவே வகுப்பு வித்தியாசம், ஜாதிபேதம் என்பவற்றை அகற்றவேண்டும் என்று சுபாஷ் போஸ் பகீரதப் பிரயத்தனப்பட்டார். எல்லாரும் ஓர்குலம், எல்லாரும் ஓர்ஜாதி எல்லாரும் இந்தியமக்கள் என்பதை போஸ் இரவு பகலாகத் தனது பிரஜைகளுக்கு உணர்த்தி வந்தார்.

**கிழக்காசியாவில் ஒற்றுமை**

ஆசியாவில் உள்ள மக்கள் ஐரோப்பியர்க்கு ஏன் அடிமைப்பட்டு வாழவேண்டும்? ஆசியா ஆசியாக்காருக்கே சொந்தம் என்ற கோஷம் இந்தக் காலத்தில் வெகுவாகப் பரவியது. 1943ம் ஆண்டின் இறுதிப் பாகத்தில் டொக்கியோ நகரில் ஆசியா மக்களின் மகாநாடு ஒன்று கூடியது. இம் மகாநாட்டுக்கு அநேகம் பிரதிநிதிகள் சமுகம் அளித்தனர். நேதாஜி போசுக்கும் இம் மகாநாட்டுக்குச் சமுகமளிக்கும்படி விசேஷ அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்த மகாநாட்டில் இந்தியா சுதந்திரம் அடைய வேண்டும் என்ற பிரச்சினையை எல்லாப் பிரதிநிதிகளும் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டனர். அந்த மகாநாட்டில் இந்திய சுதந்திர விஷயமாகவும், கிழக்காசியமக்களின் ஒற்றுமை விஷயமாகவும் நேதாஜி போஸ் ஓர் ஆணித்தரமான பிரசங்கம் செய்தார். அப்படிப்பட்ட வீராவேசமான உருக்கமான பிரசாரணத்தை முன் ஒருபோதும் கேட்டதில்லை என்று அம் மகாநாட்டிற் சமுகமாயிருந்தோர் அனைவரும் ஒப்புக்கொண்டனர். இதன்பின் நேதாஜியின் பிரசங்கம் என்றால், ஒரே ஜனசமுத்திரம்தான் இந்த மகாநாட்டில் ஆசியா மக்களின் சுதந்திர சாஸனம் ஒன்று தயார் செய்யப்பட்டது. இந்தச்சாஸனம் மகா அற்புதமானது. இந்தச் சாஸனத்தின்படி உலக வல்லரசுகள் இப்போது தானும் நடக்கமுற்படுவார்களானல், உலகில் யுத்தம் என்பது இனி ஒருபோதும் தலைக்காட்டாது. இச் சாஸ

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# ஆனித் திருமஞ்சனம்

திரு. சே. வெ. ஐம்புலிங்கம்பிள்ளை

சித்திரையி லோணை முதற் சீரானி
யுத்திரமாம்
சத்து தனுவாதிரையுஞ் சார்வாகும்—
பத்திவளர்
மாசியரி கன்னி மருவு சதுர்த்தசி மன்று
ஈசரபிடேக தினமாம்.

சித்திரைத் திருவோணம், ஆனி உத்திரம், மார்கழித் திருவாதிரை, மாசி, ஆவணி, புரட்டாதி மாதப் பூர்வபக்கச் சதுர்த்தசி திதிகள் ஆகிய இவ்வாறு தினங்களும் நடராசமூர்த்தியின் அபிடேக நாட்களாம் நமக்கேற்பட்ட ஒருவருடம் தேவர்களுக்கு ஓர் நாளாவதால் இந்த ஆறு அபிடேக நாட்களும் எம்பெருமானுக்குத் தேவர்களால் தினந்தோறும் செய்யப்படும் ஆறுகால பூசைகளாகும். தேவர்களுக்கு உத்தராயணம் பகலும் தக்ஷிணாயனம் இரவுமாம், இவ்வாறுகால பூசைகளுள் மார்கழித் திருவாதிரைப் பூசை உஷக்கால பூசையாகும், மாசிமாத சதுர்த்தசிப் பூசை காலைப் பூசையாம், சித்திரைத் திருவோணப் பூசை உச்சிக்கால பூசையாம், ஆனித் திருமஞ்னசம் பிரதோஷகால பூசை ஆவணி சதுர்த்தசிப் பூசை இராக்கால பூசையாம், புரட்டாசி சதுர்த்தசிப்பூசை அர்த்தசாம பூசையெனப்படும்

நடராசப் பெருமானுக்குச் செய்யும் அபிஷேகம் முதலியன உயிர்கள் ஈடேறும் பொருட்டுச் செய்யாமற் செய்து கொண்டிருக்கும் பஞ்ச கிருத்தியங்களுக்கு அறிகுறியெனற்பாலன. எப்படியெனிற் கூறுவாம்:- நடராசமூர்த்தி சிற்சபையை விட்டெழுந்தருளுவது சிருட்டி. இரக்ஷாபந்தனந் தரிப்பது திதி; கறுப்புச் சாந்து தரிப்பது சங்காரம்; வெள்ளை சாத்துவது திரோபவம்; தரிசனங்கொடுப்பது அனுக்கிரகம்.

சிதம்பரத்திலே ஆனித் திருமஞ்சனத்தை முன்னிட்டு பிரமோற்சவம் நடப்பதுண்டு ஆனல் ஆருத்திரா தரிசனமே விசேஷமாகக் கொண்டாடப்படுவது. இப்புனித நாளில் யாமெல்லாம் நடேசப் பெருமானை வாழ்த்தி வணங்குவோமாக.

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுந்தன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வரவிதா மின்பமாமென்று
கண்ணிலானந்த வருவி நீர்சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணிஞனீடி யறிவரும் பதிகம்
பாடினர் பாவினர் பணிந்தார்.

# அடக்கமாய் நட

## புகைரதப்பகுதி உத்தியோகத்தர்க்குக் கட்டளை

போட்ட முதலின் வட்டிக்குத் தானும் உழைக்க வழியறியாதிருந்த இலங்கைப் புகைரதப்பகுதிக்கு இப்போது முடிந்த மகாயுத்தத்துடன் சுக்கிரதிசை ஆரம்பமாகி, ஆதாயமுங் காட்டத் தொடங்கியது. "பிரயாணம் செய்யுங்கள்" என்று ஊரவரை வேண்டியகாலம்போய், "புகைரதத்தில் அவசியமில்லாமற் பிரயாணஞ்செய்யவேண்டாம்" என்று அதிகாரிகள் கூறவேண்டிய காலமும் வந்தது. புகைரதப்பகுதி அதிகாரிகளும் பிரயாணிகளை வேண்டாப் பிராணிகளாக ஓரளவுக்கு மதித்து நடத்தினர். யுத்தம் முடிந்தது. யுத்தத்துக்கு முந்தி என்ன நிலைமையிருந்ததோ, அந்த நிலைமை மெல்ல மெல்லவாகத் திரும்பி வருகிறது. எனவே, யுத்தகாலத்தில் நிகழ்த்தியவாறு, பிரயாணிகளை வேண்டா வெறுப்பாக நடத்தக்கூடாது என்ற ஞானம் நமது புகைரதப்பகுதியார்க்கு உதித்துவிட்டது.

புகைரதப்பகுதித் தலைவர் தம்கீழ் உள்ள உத்தியோகத்தர், சிப்பந்திகள், காவலர் அனைவர்க்கும் இப்போது ஓர் சுற்றுநிருபம் விடுத்திருக்கிறார். பிரயாணிகளுடன் மரியாதையாக நடக்கவேண்டியதன் அவசியத்தை அவர் அதில் வற்புறுத்தியிருக்கிறார். அவ்வறிக்கையின் சாரம் வருமாறு:

"பிரயாணிகளோ, புகையிரதம் மூலமாகப் பொருள்களை அனுப்புவோரோ, தம்அதிருப்தியைக் காட்ட அவர்களுக்குப் பூரண உரிமையுண்டு என்பதை நீவிர் ஒவ்வொருவரும் நல்லாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். எனவே, அவர்களுடன் அவசியமற்ற பேச்சுக் கொடுக்கவேண்டாம். மன நிம்மதியுடன், அடக்கமாக, ஆர அமர, ஆறுதலாகப் பிரயாணிகளுக்கோ, மற்ற ஊரவர்களுக்கோ, அவர்கள் கூறுவதைக் கேட்டுநீவிர்உதவி செய்யவேண்டும்".

# "டம்பாச்சாரி நாடகம்"

## பொதுஜனங்களை ஏமாற்றச் சூழ்ச்சி பதவிவேட்டுவர் கையாண்டுவரும் முறைகள்

### நகரசபைத் தலைவரின் பகிரங்கக் கண்டனம்

(நமது நிருபர்)

"இப்போதுள்ள அரசாங்கசபையினரும், மந்திரசபையினரும் நிகழ்த்திவரும் டம்பாச்சாரி நாடகம், இந்த இலங்கையை எங்கே கொண்டுபோய் விடுமோ யான் அறியேன்" என்று யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவர் ஸ்ரீ க. பொன்னம்பலம்சென்றவாரம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிற் நிகழ்ந்த ஆசிரியர் தினக் கூட்டத்திற் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்துக்கு, யாழ்ப்பாணம் எங்கணும் இருந்து பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களும் பொதுஜனங்களும் சமுகமாயிருந்தனர். ஸ்ரீ க, பொன்னம்பலம் அவர்கள் தலைமை வகித்தார். மேலே காட்டியவாறு கூறிவிட்டு ஸ்ரீ பொன்னம்பலம் தொடர்ந்து பேசியதாவது:

"இனி வரப்போகும் பாராளுமன்றம் இந்த இலங்கையின் பரிபாலனத்தைச் செவ்வனேநடத்துமா என்பது மிகவும் சந்தேகம் அரசியல் நிலைமையை அல்லோல கல்லோலப்படுத்தி இந்நாட்டின் செல்வ நிலைமையை இது நாசமாக்கக் கூடும்.

'இப்போதுள்ள அரசாங்கம் இலவசக் கல்வி முறையை ஆக்கியிருக்கிறது. ஓர் புதிய சம்பளத்திட்டத்தையுண்டாக்கியிருக்கிறது. இவை எல்லாம், வரப்போகும் தேர்தலில், வாக்காளராயுள்ள பொதுஜனங்களை ஏமாற்றச் செய்யும் செப்படி வித்தைகளாகும், தாம் மீண்டும் தேர்தலில் வெற்றிபெற ஓர் சிலர் போட்டுள்ள வேஷங்களாகும்.

"இப்படியான திட்டங்களினால், அரசாங்கத்திற் பணம் இல்லாதுவிட, நடப்பது என்ன? உங்கள்கருமத்தை நீங்களே நடாத்துதற்கு உங்களுக்கு ஆற்றல் இல்லை என்று பிரிட்டிஷ் அரசாங்கம் கூறி, எல்லா அதிகாரங்களையும் தொன்மைபோலத் தன் வசம் ஏற்றுக்கொள்ளக் கூடும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

எங்கும் கியாதிபெற்ற எமது

ரேடியோ பீடிகளையே

எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

எல்லாஊர்களிலும் கிடைக்கும்

மொடேண் ஏஜென்சீஸ்,
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)



வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்

### விமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம் ஆ வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது

இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை

நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கோடுக்கப்படும்

விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, டொன் கரலிஸ் கட்டிடம்,
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு

Mis 154 29-11-45—30-11(தி)



## பேர்பெற்ற பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகள்

உலகப் பிரசித்திபெற்ற, திறமானவையும், நன்மதிப்பு உள்ளவையும், பேசல் மிஷன கலிக்கற் ஓடுகளே. மிகக் குறைந்த தண்ணீரை உறிஞ்சுவன. கடைகளில் விலைப்படும் பலதினிசு ஓடுகளையும் நிறுத்துப்பார்த்துத் தண்ணீருள் நனையவிட்டுபபின்னும் நிறுத்து எது கூடிய தண்ணீரை இழுக்குமெனப் பரிசோதித்துப் பாருங்கள் தற்கால நிலைமைக்கும். தேவைகளுக்கும் எற்ற ஒரு புதுமாதிரி இவ்வோடுகள் செருகு விழிம்பும், இரட்டைப் பீலியும் உள்ளனவாய்ச் செய்யபபட்டு இக்காலத்தில் அதிகமாய் உபயோகிக்கப்படுகின்றன. கீழைத் தேசத்தில் விலைப்படும் ஓடுகளுள் இவைகளே முதன்மை பெற்றன. வாங்கத் தீர்மானிக்குமுன் இவ்வோடுகளை ஒருதரம் பாருங்கள், கவனியுங்கள், மற்றைய ஓடுகளில் ஏமாந்து நட்டப்படாதீர்கள்

வேறு சாதி ஓடுகளைப்போல வழக்கமான தனிப் பீலி ஓடும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வில்லியம் மேதர் அன்சன்ஸ், தனி ஏசன்ட்
1888-ம் ஆண்டு முதல்.

Misc. 250—19-3-46—19-9-46) (செ)



## தந்தரோகசஞ்சீவி

### கந்தசாமி வைத்தியர்

## சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மேடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4 46—25-10-46



## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நி 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4 46 to 22-3-47)


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### செவ்வாய் ஜூலை 16

காலை: 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கே ஆர் தங்கவேலு பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 சித்தூர் சுப்ரமணியபிள்ளை 8-20 பந்தணைநல்லூர் எஸ் ஜீவாயி பாட்டு 9 முடிவு

1 மணிக்கு 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பந்தணைநல்லூர் எஸ் ஜீவாயி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 பந்தணைநல்லூர் எஸ் ஜீவாயி பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை: 5 குன்னக்குடி வி. வெங்கடராமய்யர் புல்லாங்குழல் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில செய்திகள 6-10 அறிவிப்புகள 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7 15 அரங்க இலக்கணம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 மரணத்தின் மூன் நாடகம் 8 கே ஆர் தங்கவேலு பாட்டு 8-20 குன்னக்குடி வி. வெங்கடராமய்யர் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 சுகந்த இசை 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 நீங்கள் கேட்டவை 10.30 முடிவு.

### புதன் ஜூலை 17

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கண்டதேவி எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வாத்ய கோஷ்டி 8-30 பந்தணைநல்லூர் எம் முத்தையாபிள்ளை வயலின் 9 முடிவு.

1 மணிக்கு 1.30 ஆங்கிலத்தில்செய்திகள் 1.40 கே வைதேகி கே ஆனந்தா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கே வைதேகி. கே ஆனந்தா பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு கட்டு 2.45 முடிவு.

மாலை 5 பந்தணைநல்லூர் எம் முத்தையாபிள்ளை வயலின் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள 6-10 அறிவிப்புகள் வானிலை 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி கே பட்டம்மாள் 7-15 லலிதா வெங்கடராமன் வீணை, பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால்பெட்டி 8 கே வைதேகி, கே ஆனந்தா பாட்டு 8.30 கண்டதேவி எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஐரோப்பிய சங்கீதம் 10.30 முடிவு

### வியாழன் யூலை 18

காலை: 7.15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள 7.30 கல்பகம் நாராயணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 ராகமாலிகை 8.30 ஏ ருக்மணி வீணை 9 முடிவு

1 மணிக்கு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 ஏ ருக்மிணி வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 ஏ ருக்மணி வீணை 2 15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 ஏ கே கணேசபிள்ளை பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 கல்பகம் நாராயணன் பாட்டு 7-15 இலக்கிய வாசகம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 வாளாடி என் ருக்மிணி புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 வசந்தபாலா நாடகம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 திருவெண்காடு ஏ கே கணேசபிள்ளை பாட்டு 10.30 முடிவு.

### வெள்ளி யூலை 19

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி ஆர் துரைவேலு பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8.30 வட்டனூர் டி எஸ் மதுரம் சகோதரிகள் பாட்டு 9 முடிவு.

1 மணிக்கு 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வட்டனூர் மதுரம் சகோதரிகள் பாட்டு 2 தமிழில் செய்திகள 2-05 வட்டனூர் டி எஸ் மதுரம் சகோதரிகள் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை: 5 டி ஆர் துரைவேலு பாட்டு 5.40 குரான்-ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 குரல்வகை 7-15 செய்தி விளக்கம் 7.20 தமிழில் செய்திகள் 7-45 திருக்கரை எஸ் பிச்சையப்பாபிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 டி வி கிருஷ்ணமூர்த்தி பாட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானலை 9.45 உலக விவகாரங்கள 10 இலங்கை 10 30 முடிவு.


## தமிழ் அன்பர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

## நூலகம் புத்தகசாலை

### சோல் ஏஜண்டுகள்:

ரமணாஸ்ரமப் பிரசுரங்கள், மதுரை சுவாமிநாதன பிரசுரங்கள், பேராசிரியர் சோமசுந்தரபாரதியார் பிரசுரங்கள், பாரதி பிரெஸ் பிரசுரங்கள்.

எங்களிடம் சகல தமிழ்ப் பாட புத்தகங்களும் ஏனைய உயர்தர நூல்களும் குறைந்த விலைக்குக் கிடைக்கும். ஆகையால் தமிழ்ப் பரீட்சைக்குரிய சகல பாடபுத்தகங்களையும் வாங்க விரும்புவோர் நேரிற் பெற்றுக்கொள்ளலாம். அல்லது கீழ்க் கண்ட விலாசத்துக்கு எழுதவும்

நூலகம் புத்தகசாலை,
19, றைவிள் ஸ்ரீற்,
கொம்பனித்தெரு, கொழும்பு

Mis 109 12—16-7



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து எற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

V 12 20-11-45—20-11-46 (தி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயராஜ்ய ஸ்தாபனம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

னம், மேனாட்டு வல்லரசுகள் வகுத்துள்ள அத்லாந்திக் சாஸனம் போல கேலிச் சாதனம் அல்ல. உலகிற் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்ட ஆக்கப்பட்ட ஓர் பெரிய தஸ்தாவேஜாகும்.

**சுயராஜ்யம், ஷாகீத்**

ஜப்பான் தான்செய்த வாக்குறுதியின்படி பிலிப்பைன் தீவுகளுக்கும் பர்மாவுக்கும் சுயராச்சியத்தைக் கொடுத்தது. இதனை நேதாஜிபோஸ் பாராட்டிவிட்டு இந்திய சுதந்திர இயக்கத்தின்மீது ஜப்பானுக்கு உண்மையான அபிமானமும் ஆர்வமும் இருந்தால், அந்தமான் நிக்கோபார் தீவுகளை இப்போது நிறுவப்பட்டுள்ள இந்திய சுதந்திர அரசாங்கத்திடம் ஒப்புவிக்க வேண்டும் என்று ஜப்பானியப் பிரதமரான டோஜோவைக் கேட்டார். பிரதமமந்திரி டோஜோவும் தம் சக்கரவர்த்தியுடனும் சகாக்களுடனும் கலந்தாலோசித்துவிட்டு, நேதாஜி விரும்பியபடி குறித்த இரண்டு தீவுகளையும் இந்திய சுதந்திர அரசாங்கத்திடம் ஒப்படைத்தார் உடனே அந்தமானுக்கு 'சுயராச்சியம்' என்ற பெயரையும், நிக்கோபாருக்கு 'ஷாகீத்' என்றபெயரையும் நேதாஜிசூட்டினார் இந்த இரண்டு தீவுகளையும் பரிபாலிக்கும் தேசாதிபதியாக ஸ்ரீ A. D. லோகநாதன அனுப்பப் பட்டார். இநத இரண்டு தீவுகளையும் கையேற்ற அன்று சுபாஷ்சந்திரபோஸ் உலக மக்களுக்கு ரேடியோமூலம் ஓர்செய்தி விடுத்தார். அது வருமாறு: "இந்த இந்திய சுதந்திர இயக்கமானது. ஜப்பானியரால் உண்டாக்கப்பட்ட ஓர் பொய்யான இயக்கம் என்று பிரிட்டிஷார் கூறிவருகின்றனர். எங்களுடைய அரசாங்கம் எவரதுங் கைப்பொம்மையில்லை என்பதை உங்களுக்குத் தெரிவிக்கிறேன். 'நாமார்க்கும குடியல்லோம்'! எம்முடைய சொந்த ராணுவம் எம்முடைய சொந்த அரசாங்கம். கடைசியாக எமக்கெனச் சொந்தமான இரு தீவுகளையும் நாம் இப்போது பரிபாலிக்கிறோம். இந்த அந்தமான், நிக்கோபார் தீவுகளை இந்தியத் தேசாபிமானச் சிங்கங்களை அடைக்கும் பிரதேசங்களாகப் பிரிட்டிஷார் இதுகாறும் வைத்திருந்தனர். இந்த இரு தீவுகளும் எம் வசப்பட்டமை, பிரிட்டிஷாரின் அடக்கு முறைக்குச் சாவுமணி அடித்தது போலாம். இந்தியப் புரட்சி இயக்கத்தை இனியும் பிரிட்டிஷார் நசுக்கமுடியாது. (வரும்)


## விளம்பரம்

கிளிநொச்சிக் கலனிக் குடியேற்றத்தில் வீடுகள் கட்டும் இடங்களில் 2,000,000 சுட்ட செங்கல்லுகள் கொடுப்பதற்கு 1946-ம் ஆண்டு ஜூலை மாதம், 30-ந் திகதி பகல் 12 மணிவரைக்கும் கொழும்புத் திறைசேரியில் ரெண்டர் போட் சேர்மன் அவர்கள் ரெண்டர் ஏற்றுக்கொள்வார். ரெண்டர்கள் ரூபா 25 கட்டி வட மாகாண அரசாட்சி ஏசண்டரிடம் பெற்றுக்கொண்ட போம்களில் எழுதப்பட வேண்டும் மறு விபரங்களையும் அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(G 45, 16, 19, 23-7-46)

## தேவை

நீர்வேலி செவ்வேள் ஐக்கிய பண்டகசாலைக்கு 1-8-46 தொடக்கம் ஒரு மானேஜரும் ஒரு விற்பனையாளரும் தேவை மானேஜரோ விற்பனையாளோ நியமித்தல் வேண்டும். மானேஜர் பிணைப்பணமாக 500 ரூபா கட்டல்வேண்டும். இராக்காவல் உட்பட இருவரதும் மாத வேதனம் 80 ரூபா. விரும்பியோர் 20-7-46 க்கு முன் காரியதரிசிக்கு மனுச்செய்க.

(Misc. 113 16-6-46)


## மருத்துவப் பயிற்சி

பதினெட்டுமாத மருத்துவப் பயிற்சி பெற விரும்பும் பெண்கள் தங்கள் விண்ணப்பப் பத்திரங்களை 1946-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிட்டக்கூடியதாக வைத்திய சுகாதார பிரதம தலைவருக்கு அனுப்ப வேண்டும்,

2. விண்ணப்பம் செய்வோரின் (அ) வயது 1946-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதியன்று 20 க்கு மேலும் 30 க்கு கூடாமலும் இருக்கவேண்டும் (ஆ) அவர்கள் ஆங்கிலத்திலேனும் சிங்களத்திலேனும் அல்லது தமிழிலேனும் கனிஷ்ட தாரதரப் பரீட்சையில் தேறியிருக்கவேண்டும். அன்றேல் வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப்பட்ட சமமான அல்லதுமேலான வேறு சோதனையில் தேறியிருக்கவேண்டும் வித்தியாபகுதியாரால் இனிமேல் கனிஷ்ட தாரதரப் பரீட்சை நடத்தப்படமாட்டாதாகையால் மனுச்செய்வோர் மனேஜர் அல்லது தலைமை உபாத்தியாயரிடமிருந்து தாங்கள் கனிஷ்ட தாரதரப் படிப்புமுடித்தவர்களென பத்திரம்வாங்கி அனுப்பவேண்டும்.

3 இதற்கெனக் குறிக்கப்பட்ட பத்திரங்களிலேயே விண்ணப்பம்செய்யவேண்டும். இப்பத்திரங்கள் வைத்திய சுகாதாரப் பிரதம அதிகாரியின் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

4 விண்ணப்பம் செய்வோருக்குக் கீழ்க் குறிக்கப்பட்ட பாடங்களில் ஓர் போட்டிப் பரீட்சை நடாத்தப்படும்:

அ. இலேசான ஒரு விஷயத்தைப் பற்றிய வியாசம்,

ஆ இலங்கைச் சரித்திரம்

இ, இலங்கைப் பூமிசாஸ்திரம்.

சோதனைப் பிரவேசக் கட்டணம் ரூபா 2.50. இக் கட்டணத்தை அனுப்பும்படி அறிவித்தாலன்றி விண்ணப்பகாரர் அனுப்பப்படாது.

5. இப்போட்டிப் பரீட்சையிற் பெற்ற புள்ளியின்படி தேவைப்பட்ட தொகையினர் 1946 ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலும் 1947 ம் ஆண்டு ஜனவரி, ஏப்பிரல் யூலாய் மாதங்களிலும் நடக்கவிருக்கும் பயிற்சி வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். தெரிவு செய்யப்பட்டோர் எல்லா விதங்களிலும் தேகசுகத்தில் தகுதியெனக் காணப்படல் வேண்டும்.

6. இப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவுடன் ஒவ்வோர்பெண்ணும் பயிற்சி முடிந்ததும் இவ்விலாகாவில் மூன்றுவருட காலத்திற்கு கடமை செலுத்துவேனென ஓர் உடன்படிக்கை எழுதவேண்டும்.

7. மனுப்பத்திரத்தை அனுப்பும்உறையின் இடதுபக்கத்து மூலையில் "மருத்துவப்பயிற்சிக்கு மனு" என்றெழுதி 'வைத்திய சுகாதாரப்பகுதி பிரதம தலைவர், தபால்பெட்டி இல 500, கொழும்பு" என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

8. எனக்கேனும் அல்லது இப்பகுதியிலுள்ள வேறெவர்க்கேனுங் பெயர்குறித்து விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பப்படாது.

எஸ். எவ். செல்லப்பா

வைத்திய சுகாதார பிரதம தலைவர்

கொழும்பு, 10, யூலை, 1946

(G. 43. 16-7-46)


## இதோ வந்துவிட்டது!

வீட்டுத் தளபாடங்கள் செய்தற்கான அருமையான பிரம்பு வந்துவிட்டது, விபரங்களுக்குப் பின்வரும் விலாசத்துக்கு எழுதுக:

The Overseas Commercial
(Ceylon) Agency Ltd.
P. O. Box No. 44
Colombo.

(Misc. 118. T. 16 & 19-7-46)


### 6 கோடி ரூபா

அடுத்தஆண்டில் கல்விச் செலவின் பொருட்டு 6 கோடியே 6 லட்சத்து 18 ஆயிரம் ரூபாவை மந்திரிசபையினர் ஒதுக்க வேண்டும் என நிச்சயித்திருக்கிறார்கள். இத் தொகையிற் பெரும்பகுதி இலவசக் கல்வியின் பொருட்டு செலவாகும்.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

உருப்பம தாகிய வொளிறு தீஞ்சுடர்
தரிப்பதோர் மருத்துவன் தம்முன் சென்றிடத்
திருப்பயின் மான்முதற் றேவர் வெள்ளியம்
பருப்பத மொருவியே படர்தன் மேயினார்

திருமகள் வசிக்கும் மார்பினையுடைய திருமால் முதலிய தேவர்களனைவரும், வெம்மையையுடைய பிரகாசிக்கின்ற தீப்பொறிகளைச் சுமந்து செல்கின்ற வாயுதேவன் தம்முன்னே செல்ல, திருக்கைலாசத்தை விட்டகன்று போவாராயின ரென்பது கருத்து.

தீப்பொறிகளைச் சுமந்து செல்லும் பேறும் பொறுப்புமுடைய வாயுதேவனை முந்தி நடக்கச்செய்து, அரிபிரமர் முதலாந் தேவர் பின்றொடர்ந்து சென்றன ரென்றபடி.

தீச்சுடரென்னாது தீஞ்சுடரென்றதில் தீம் என்ற அடை இனிமை இதம் என்னும் பொருளும் படச் சிலேடையாகக் கூறப்பட்டது; [இச்சுடர் அரிபிரமேந்திராதி தேவர்கள் முதலாம் சகல உயிர்கட்கும் அருள் செய்யு மியல்பினவாதலி னென்க; அங்ஙனமாயின் உருப்பமதாகிய சுடரெனக் கூறப்பட்டிருத்தல் முரண்படுமே யெனின் அற்றன்று, இங்கே உருப்பமென்றது இறைவன் செய்யும் மறக்கருணையைக் குறித்து நின்றது. (83)

இறத்தலுங் கன்னலோன் றெரியின் றீஞ்சுடர்
பொறுத்திட லரிதெனப் புலம்பிக் காலினோன்
மறுத்தவிர் பிறைமுடி வரத னாணையாற்
றிறப்படு வன்னிதன் சென்னி சேர்த்தினான்

ஒருநாழிகைப்போது கழிந்தவுடன் வாயுதேவன் வெவ்விய தீப்பொறிகளைச் சுமத்தல் அரிதென (க்கண்டு) வருந்தி, மறுவற்ற பிறைச் சந்திரனைத் தரித்த அருள் வரதராகிய கைலாசபதி யருளிய வரத்தினால், வலிமையைப் பெற்ற அக்கினி தேவனது தலையிற் சுமத்தினா னென்பது கருத்து.

இப்பொறிகளைக் கைலையிலிருந்து கங்கை வரையிற் சுமந்து சென்றிடுதற்காகிய பேராற்றல் வாயுவுக்கும் அக்கினிக்கும் இறைவனால் அருளப்பட்டதென்பது 'துன்றிய தீச்சுடர் சுமந்து கங்கையிற் - சென்றிட நுங்கள்பால் திண்மை யெய்துக" என முந்தியே கூறப்பட்டிருப்பவும் இப்பொழுது இடையில் இவற்றைச் சுமக்கலாற்றாது வாயுபகவான் இடர்ப்பட்டு அக்கினிதேவன் றலையிற் சுமத்தியதென்னையோ வெனின் பாதி வழிதூரஞ் சுமக்கு மாற்றலை வாயுதேவனுக்கும் எஞ்சிய பாதிவழி தூரஞ் சுமக்குமாற்றலை அக்கினி தேவனுக்கும் இறைவன் முறையே வழங்கினா ரென்க சந்திரனிடத்துள்ள மறு கலை வளர்ந்த பின்னரே காணப்படுமாதலானும், பெருமான் திருமுடியிலுள்ள சந்திரன் என்றும்பிறைச் சந்திரனாதலானும், அம்மூன்றும பிறையிடத்து மறுக்காணப்படுதலரிதாதலானும், மறுத்தவிர் பிறையென்றார்; இனி மறுத்தவிர் பிறை யென்பதற்குத் தக்கனால் இடப்பட்ட சாபமாகிய குற்றம நீங்கிய பிறையெனக் கொள்ளினுமாம்; வாயுதேவன் பொறிகளின் வெம்மையையும் பாரத்தையும் கணப்பொழுதேனும் சுமக்கலாற்றானாதலின், இதனை நீ சுமந்துவா என்று அக்கினி தேவனிடம் வாய்விட்டுச் சொல்லிச சுமத்தாது வாளா தன் றலையினின்று மெடுத்து அவன்றலையில் வைத்தா னென்பதைக் குறிப்பா லுணர்த்துவார் ஆசாரிய சுவாமிகள் "காலினோன்........வன்னிதன் சென்னி சேர்த்தினான்" எனக் கூறினார்

[அத் தீப்பொறிகளாறும் ஞானாக்கினியாதலின் வாயுவின் தாக்கினைச் சகிக்குன்றாதனவும் தரிக்கலாற்றாத பாரமுடையனவுமாயின வென்க.] (84)

சேர்த்தலு மொருபதந் தீயின் பண்ணவன்
வேர்த்துடல் புழுங்குற மெலிவிற் றூங்கியே
பேர்த்தொரு பதமிடப் பெறாது வல்லைபோய்
ஆர்த்திடு கங்கையி னகத்துய்த் தானரோ

அவ்வாறு சுமத்துதலும் அக்கினிதேவன் தேகம் வெயர்வை யடைந்து புழுங்க, வருத்தத்தோடு ஒருநாழிகை நேரஞ் சுமந்து ஒரு அடிதானும் பெயர்த்து வைக்கமுடியாதவனாய் விரைந்து போய் ஒலிக்கின்ற கங்கையினிடத்து (அப்பொறிகளை) இட்டானென்பது கருத்து.

பதம் முன்னையது நாழிகை, பின்னையது காலடி. சுமத்த லரிதெனினும் கங்கையி லிடும்வரை எவ்வாற்றானுஞ் சுமந்துகொண்டே போதல் வேண்டுமென்ற மனத்திடமபண்டு விரைந்து சென்றானென்பார் "வல்லை போய்க் கங்கையினகத்துய்த்தா னென்றார். (85)


## இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்
## வலிகாமம் - கிழக்குப்பகுதி

சைவ வித்தியா விருத்திச் சங்கக் [இந்துபோட்]
காரியதரிசியும், அப்புக்காத்துமாகிய
கோப்பாய்

### திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம்

அவர்கள்

புது அரசியல் திருத்தப்படி நிறுவப்படும் இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தவர் பதவிக்கு ஓர் அபேட்சகராக முன்வந்திருக்கிறார்கள்.

பிரிவு: கீழே காட்டப்படும் கிராமச்சங்கப் பகுதிகள்

(1) அச்சுவேலி. (2) புத்தூர், (3) உரும்பராய், ஊரெழு, நீர்வேலி (4) கோப்பாய், (5) நல்லூர், (6) கொக்குவில், கோண்டாவில்,

Misc. 119 16—26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகரின் திருவாசகம்

(A. செல்வநாயகம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவன்)

திருவாசகத்தை இயற்றுமை செய்தவர் நம் சமய குரவர்களில் ஒருவராகிய மாணிக்கவாசகப் பெருமான். ஆன்மாக்கள் துணிந்து வழிபட்டு உய்யும் பொருட்டு பல அற்புதங்களினாலே சைவசமயத்தை ஸ்தாபித்தாரிய சமயாசாரியருள் ஒருவர். மூத்தத் தாண்டவர் "மாணிக்கவாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ என்றியேன்" என்று கூறியதால் இவர் பேற்றை பெரிதாக மதித்தனர் என்பது வெள்ளிடைமலை. அவருக்குப்பின் வந்தவர்களும் இவரைப் போற்றினர். பட்டினத்தடிகளும் தமது திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் "வித்தகப் பாடன் முத்திறத்தடியரும் திருந்திய அன்பிற் பெருந்துறைப்பிள்ளையும்" என்று அவரை மூவரோடு சேர்த்து வாழ்த்தினர். பொன்னம்பலவனின் திருவிளையாடலென்னே! அவையின் சிறப்பும் வியப்பம் என்னே! நரியெல்லாம் பரியாக்கித் தெருவெலாந் திரித்தான், வந்தியின் பிட்டுக் கின்று வைகையை அடைக்கச் சென்றான். பாவம்! "அறவெடுத்த சடைமுடிமேல் மண் சுமக்க மாட்டாமல்" அடியும்பட்டான். அத்தொண்டரை அடிக்கீழ்ச்சேர்த்தான். இத்துணைப் பெருமை வாய்ந்த மணிவாசகர் தனது உலகத்துக்கும், சமயத்துக்கும் தமிழ்த்தாய்க்கும் செய்த தொண்டுகள் என்னே! சைவசமயத்தைத் தலைகாட்டினர். தமிழையும் சைவமதத்தையும் அலைத்துத் தொலைக்க முயன்ற பௌத்த சமயத்தைத் தலைசாய்த்தனர். சைவசமயமே மெய்ச் சமயமென்றும் தெய்வம் சிவபிரானென்றும் அவரே ஒப்பற்ற தெய்வமென்று தலைகாட்டினர். ஏனைய சமயங்களையும் அவற்றின் கொள்கைகளையும்,

"உலகச் சமயக்க ளொவ்வாத
சாத்திரமாஞ்
சலக்க டலுளனுக் கிடந்து
தடுமாறும்"

என்றும் அவற்றைத் தழுவுபவர் முத்திக் கரையைக் காணாது தத்தளிப்பரென்றும் சொன்னார். தாயுமான சுவாமிகள் சொன்னபிரகாரம் "சைவ சமயமே சமயம்" என்று சைவத்தின் உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளார். இவர் தமிழ்த்தாய்க்குச் செய்த தொண்டே சிறந்த தொண்டு. இவரியற்றிய நூல்கள் திருவாசகமும் திருக்கோவையாரும். இவையிரண்டும் அன்றும் இன்றும் என்றும் மங்காப் புகழுடன் திகழ்ந்து விளங்கும். திருவாசகத்தின் பெருமையையும் அதனிலுள்ள தத்துவ ஞானங்களையும் சமயக் கொள்கைகளையும் சிறிது ஆராய்வாம்.

திருவாசகமானது கனகசபையின் கண்ணே மணிவாசகசுவாமிகள் திருவாய்மலர்ந்தருள ஸ்ரீ நடராஜப்பெருமான் தம் அருமைத் திருக்கரத்தால் எழுதியதென்றால் அதன் பெருமை சொல்லவும்படுமோ! நம்பியாண்டார் நம்பிகள் திருமுறை வகுத்தபோது மூவர் திருமுறைகளையும் ஏழு திருமுறைகளாக்கி திருவாசகத்தை எட்டாம் திருமுறையாக வகுத்தார். இதனால் அதன் பெருமை புலப்படும். சைவசித்தாந்த சாஸ்திரங்களை தம் புலமையாலருளிய சந்தான குரவர் நால்வரில் காலத்தாற் கடைப்பட்டவராகிய உமாபதி சிவாசாரியார் வேதாகம ஆராய்ச்சி வல்லார், சாத்திர நுட்பங்களனைத்தையும் ஐயந்திரிபற அறிந்தவர், சிவபக்தி நிறைந்த செல்வர், உமாபதி சிவம் தமது மடத்துக்கு விருந்தாக வந்த பெற்றான் சாம்பானுக்கு முத்தி கொடுத்தவர் அவர் கூறியுள்ள செய்யுள் பின்வருமாறு;

"வள்ளுவர்நூல் அன்பர்மொழி
வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர்செய்தவுரை
ஒள்ளியசீர்த் தொண்டர்புராணம்
தொகுசித்தி யாராரும்
தண்டமிழின் மேலாம் தரம்."

இப்பாட்டில் திருவாசகம் தமிழிலுள்ள அறநூல்களி லொன்றாகக் கூறப்படுகின்றது ஔவையார்செய்த நல்வழியில்,

'தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர்சொல்லும்
ஒருவாசகமென் றுணர்."

என்று சிறப்பாகக் கூறியுள்ளார். திருக்கோவையாரையும், திருவாசகத்தையும், வள்ளுவர் குறளையும் இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என நான்கு வேதமும் மூவர் தேவாரமும் திருமூல மந்திரமுமாகிய பெரு நூல்களோடு சமமாகக் கூறப்படுகின்றது.

இத்துணைப் பெருமைவாய்ந்த திருவாசகத்தின் இயல்பென்ன! நம் வாசகத்திலடையும் பயனென்ன என்பதைச் சிறிது ஆராய்வாம். வாசகமானது ஓர் பெரியார் செய்த தோத்திரக் கொத்துப்போன்ற நூல். நூலிலுள்ள பகுதிகள் பாடியமுறை பற்றியாதல், பாமுறை பற்றியாதல், தலமுறைபற்றியாதல் பகுக்கப்படவில்லை. பொன்னம்பலவருக்கு இறுதியில் ஒப்பித்த முறைபற்றி வகுக்கப்பட்டிருக்கலாம். வாசகத்தை ஐம்பத்தொன்று பதிகமடங்கிய திருமுறையெனறல் மரபு. அதில் சிவபுராணம் கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி போற்றித் திருவகவல் என்ற நான்கு அகவல்களும் அறுநூற்று ஐம்பத்து மூன்று திருப்பாடல்கள் அடங்கிய நாற்பத்தேழு பாடற்றொகுதிகளையும் உள்ளன. ஒவ்வொரு பாட்டையும் எடுத்துப்பார்த்தால் பொருள் தெளிவாய் விளங்கும். சிலர் இதுவே கருத்தென நினைந்து வாளாவிருக்கின்றனர். சிறிது ஆராய்ச்சியுடன் நோக்கின், அவ்வாறு தோன்றும் பொருள்களை வெளிப்பொருள்கள், இதன் மெய்ப்பொருள் சிவப்பொலிவும் அருட்பொலிவும் மிகுந்த சிவநேயச்செல்வர்களுக்குப் புலப்படுவதாதலால் உரையாளரின் பொருள்கள் சொற்கருத்துக்களே. மெய்கண்ட சாத்திரம் பதினான்கிலும் தேர்ந்த செல்வர்கள் ஒருவாறுணர்ந்துகொள்ளுவதரிதாயின் மற்றவர்கள் உணரார் என்பது சொல்லாமலே விளங்கும். G. U. போப் என்பவர் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார் அதன் ஞானக் கருத்துக்கள் எம் போன்ற மக்களுக்கு வெளிப்படா. இதனைப் படித்தாலன்றி உணமறிய முடியாது. இத் திருவாசகமானது வேதசாரமாகிய திருமுறை. இது சிவ வைதிகியாயும் சிவஞான நிதியாயும் சிவானந்த அருட்பொலிவினதாயும் உளதால் பெரியோர் வேதமெனறழைப்பர் சிவப்பிரகாச சுவாமிகள் வேதத்தினும் சிறந்ததெனறும் அதைத் தலைவா வுணர்த்தாராலும் ஓசைப்படுதலின் பொருகலா கிசர்க்குமென்றும் அதனை ஓதும் கருங்கல் பனிநீருகக் கரைந்து அன்பாகுவார் என்று சொல்லினர். அக்கூறின் வீறுதியே மெய்யவாசகமடைத்தெய்வசிகாமணி என வாசகத்தின் பெருமையை யுணர்த்தியுள்ளனர்.

(வரும்)

**வளம்பாமின்றேல் பெரும்பயனில்லை**

# பதிற்றுப் பத்து

(எஸ். அருளம்பலம்)

## அரசரும் பரிசிலரும்

(முற்றொடர்)

ஆடல் பாடல்களிலும் யாழ் முதலான இன்னிசைக் கருவிகளை இசைத்தலினும் வளம்பெற்று விளங்கிய கூத்தர் பாணர் விறலியர் முதலான பரிசின் மாக்கள் பொருளளவில் வளங் குன்றியவராய் வாழ்ந்து வந்தனர். அதனால் அவர்கள் அரசர்களிடத்தும் பிற செல்வர்களிடத்தும் சென்று தங்கள் ஆடல் பாடல் முதலானவற்றை நிகழ்த்தி அவர்களை மகிழ்வித்து அவர்கள்பாற் பெற்ற பொருள்வளத்தால் வாழ்க்கையை நிகழ்த்திவந்தனர். சேர பாண்டிய மன்னர்கள் கூத்தர் முதலான பரிசிலரையும் பிற இரவலரையும் நன்கு பேணிப் பாதுகாத்துவந்தவாறே சேரவரசர்களும் பாதுகாத்து வந்தனர். இதனைப் பதிற்றுப்பத்தினை நன்கு அறியலாகும். பகை மன்னர் பலர் ஒன்றுசேர எதிர்ப்பினும் அவரை வஞ்சியாது எதிர்நின்று பொரும் அஞ்சாநெஞ்சு படைத்த சேரமன்னர்கள் இரவலாது புன்கண்மையைக்கண்டு அஞ்சினரெனின் அவர்கள்பால் இகைத்தன்மை எவ்வளவு மிக்கிருக்கிறதென்பது நன்கு அறியலாகும். ஒரு தலைமகனொருவன் தன் தலைவியின் ஊடலைக்கண்டு அஞ்சுவதிலும், ஒரு அரசன் இரவலாது புன்கண்மையைக்கண்டு மிக அஞ்சுவன் என்று ஒரு புலவர் கூறியுள்ளார்.

"ஒண்ணுதல் மகளிர் துனித்த
கண்ணினும்
இரவலர் புன்கணஞ்சும்
புரவெதிர் கொள்வனை"

(பதிற் 57—13 5)

என்பது அவர் கூற்று. இங்ஙனம் இரவலாது துன்பங்கண்டு அஞ்சிய பதிற்றுப்பத்துச் சேர மன்னர்கள் அவர்களது புன்கண்மை தீரும்படியாக அவர்களுக்கு வேண்டிய பொருள்களை அன்போடு நல்கினர்கள். இதனை "இல்லோர் புன்கண் தீர்த நாடல் சான்ற மயனுடை நெஞ்சிற், பாடுநர்புரவலன் ஆடுநடை அண்ணல்" பதிற் 86—6-8) என்பது இனிது விளக்கிநிற்றல் காண்க. "ஈர்த்த கன்றுறை விடனுடை வளனும்" (பதிற் 3—6) "கொளக் கொளக் குறையாச் செல்வத்து ...... கெடி லோய்" பதிற் 82-12-6) என வரும் பகுதிகளும் செல்வத்தைப் பெரிதும் ஈந்தமையைக் காட்டுவனவாகும்.

பரிசிலர் முதலானவர்க்கு வேண்டியவற்றை ஈதலை அரசர் தம் கடனாக மேற்கொண்டனர். அதனைக் "கொளடக்க னமர்ந்த கோடா நெஞ்சினன்" (பதிற் 50) என்பதனாலறியலாகும், செல்வமுடைக்க காலத்திலன்றி, மனனுயிரழிய யாண்டு பல மாறித் தண்ணியல் எழிலி தலையாது மாறினும், இரவலர் வயிற்றுப் பசி தீராதபடி கொடைக்கடன் ஆற்றினர், தாம் விரும்பிய பொருட்களையன்றி இரவலர் விரும்பிச் சென்றதைப் பெற்றுக்கொள்ளும்படி சேர மன்னர்கள் வரையாவிகை வள்ளியோராய் வாழ்ந்தமையின்,

'வள்ளியை யென்றலிற் காண்கு வந்திசினே, உள்ளிய முழுக்கி வாழ்சுதின் கண்ணி" (பதி. 57-13-5) எனப் பரிசிலர் அரசரை வேண்டிச் செல்வாராயினர். பகைவர் நடுவுந் தம்முயிரைப் பொருள் எனப் போற்றாத சேர மன்னர்கள் இரவலர் நடுவண் கொடையைப் போற்றுவொழிந்தனர். கண்டாரால் மதிக்கப்படும் தோற்றமில்லாதவரா யிருப்பினும் யாதொரு கல்வியில் மாட்டாராயினும் அவற்றினைப் பொருளாகக் கருதாது இரவலர் தம்பால் வந்தழி அவர் எப்பெற்றியாராயினும் அவர்களுக்கு வேண்டிய பொருளை வழங்கினர். "எமர்க்கும் பிறர்க்கும் யாவராயினும் பரிசின் மாக்கள் வல்லராயினும் கொடைக்கடனமர்ந்த கோடா நெஞ்சினன்" (பதி. 20-21-3) என்பதனால் அவ்வியல்பு அறியப்படும். பகைவர்க்கு வணங்கா ஆண்மை படைத்த பதிற்றுப்பத்துச் சேர மன்னர்கள் இரவலர்பால் வணங்கிய மென்மையுடையவராய் வேண்டுவ பொருள்களையும் உவந்தளித்தனர். அதனால் "மாரி பொய்க்குவதாயினும் சேரலாதன் பொய்யலன் நசையே" (பதி. 18 11-2) என்ற திடமான நம்பிக்கையுடன் சேரர்கள்பால் இரவலர் விரும்பியன பெறச் சென்றனர். 'இரவலர்க்குள்ளிய நசையிழைப்பறிபாக் கழறொடி யதிகன்" என்னும் அகநானூற்றுப் பகுதியும் 162 17-8) பரிசிலர் விரும்பியவற்றை அரசர் இல்லையென்னாது அளிக்கும் மரபைக் காட்டும். வேண்டிய வேண்டியாங்கு ஈந்தனர். மனங்கொள்ளாப்பாடலையுடையவர்க்கும் அரிதாகப்பெறும்பொருளையெல்லாம் எளிதாகக் கொடுக்கும் இயல்புடையான இவன் என இவையோர் தத்தங்கலையைச் சுட்டி நிரைக்கும்படி கொடைமடம் பட்டவர்களால் விளங்கினர்கள், வரையாது கொடுக்கும் வள்ளியோராய் விளங்கிய சேரமன்னர்களிடத்தும் இயல்பாகவே ஈகைத்தன்மை யமைந்து விளங்கிற்று. அரும்பெறும் பொருள்களையெல்லாம் வரையாது வழங்கியவிடத்தும், நமக்கென அவற்றைப் பாதுகாத்து வையாது வழங்கினேனே யென்று ஈந்த பொருளுக் கிரங்கலும், யாவரும் நம்பாலவாகி எறகும்படி அரும்பெறும் பொருள்களையெல்லாம் யான் வழங்குகின்றேனே யென்று ஈத்தோறும் மகிழ்தலுமாகிய இயல்பு இல்லாதிருந்தன.

"ஈர்த்திரங்கான் ஈத்தொறு
மகிழான்
ஈத்தொறு மாவள்ளியனென
நுவலுநின்
நல்லிசை தரவந்திசினே"

பதிற் 62-12-4

எனப் பொய்யாநாவிற் கபிலர் புகழ்ந்துரைத்தவாற்றால் சேரமன்னனது கொடைத்திறம் இனிது புலனாகும்.

(தொடரும்)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday July, 16, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org